සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව **ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව** ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் **இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்** இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka **Department of Examinations, Sri Lanka** Department of Examinations, Sri Lanka

3941

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

**නව නිර්දේශය**
**புதிய பாடத்திட்டம்**
**New Syllabus**

නාට්‍ය හා රංග කලාව I
நாடகமும் அரங்கியலும் I
**Drama and Theatre I**

**58 T I**

පැය තුනයි
**மூன்று மணித்தியாலம்**
*Three hours*

சுட்டெண் : ............................

| பகுதி I | |
|---|---|
| மொத்தப்புள்ளிகள் | |

**அறிவுறுத்தல்கள் :**

❋ பகுதி I இலுள்ள **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர் பகுதி II இன் விடைத்தாள்களுடன் இணைத்து ஒப்படைக்குக.

❋ பகுதி II இல் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

❋ எல்லா வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.

❋ இப்பகுதியில் **1** தொடக்கம் **40** வரையான வினாக்களுக்குச் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, **அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

1. "நாடகம் வாழ்க்கையின் பிரதிபலிப்பாகும். பழக்க வழக்கங்களைக் காட்டும் நிலைக்கண்ணாடியாகும்" எனக் கூறியவர்
   (1) பரதமுனிவர் (2) பேர்னாட்ஷா (3) அரிஸ்டோட்டில்
   (4) அபிநவகுப்தர் (5) அலடைஸ் நிக்கொல் (......)

2. ரோம அரங்கில் அரங்கவெளியின் நடிப்பிடம்,
   (1) வட்ட வடிவமான மேடையாகும். (2) நீள்சதுர மேடையாகும்.
   (3) அரைவட்ட வடிவ மேடையாகும். (4) குதிரைக் குளம்பையொத்த மேடையாகும்.
   (5) சதுரவடிவ மேடையாகும். (......)

3. பரதர் கூறும் 'சாத்விக' அபிநயத்தின் எட்டுவித பாவங்களில் குரல் மாற்றத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சமஸ்கிருதச் சொல்
   (1) ஸ்வரபங்க (2) ரோமான்ச (3) அஸ்ர
   (4) வைவர்ணய (5) ஸ்வேத (......)

4. சமஸ்கிருத நாடகத் தலைவனின் முயற்சி வெற்றிபெற வேறு ஒருவன் துணை புரிவதைக் குறிக்கும் சொல்
   (1) பிரகரி (2) பிந்து (3) பதாக
   (4) காரிய (5) பிஜ (......)

5. ஒபேரா (Opera) என்னும் நாடக வடிவம் தோன்றியது,
   (1) இத்தாலியில் ஆகும். (2) ரஷ்யாவில் ஆகும். (3) பிரான்சில் ஆகும்.
   (4) அமெரிக்காவில் ஆகும். (5) ஜேர்மனியில் ஆகும். (......)

6. ரட்டயக்கும என்னும் சாந்தி செய்யும் சடங்கின் பிரதான நோக்கம்,
   (1) நோய் தரும் பேய்களை விரட்டுதலாகும்.
   (2) மழை வளம் வேண்டுதலாகும்.
   (3) குழந்தை வரம் வேண்டுதலாகும்.
   (4) சிறந்த கணவரைப் பெறுதலாகும்.
   (5) பயிர்வளம் வேண்டுதலாகும். (......)

7. சிங்கள மக்களின் 'சன்னியக்கும' சடங்கு நடைபெறுவது,
   (1) அனுராதபுர பிரதேசத்திலாகும். (2) பொலனறுவைப் பிரதேசத்திலாகும்.
   (3) குருநாகல் பிரதேசத்திலாகும். (4) ருஹுணு பிரதேசத்திலாகும்.
   (5) மாத்தளைப் பிரதேசத்திலாகும். (......)

8. பின்வரும் பாத்திரங்களுள் காமன்கூத்தில் **இடம்பெறாத** பாத்திரம்
   (1) நந்திதேவர் (2) அகோர வீரபத்திரர் (3) விசித்திர புத்தர்
   (4) வாயுபகவான் (5) அருச்சுனன் (......)

[பக். 2 ஐப் பார்க்க

9. மானம்பூச் சடங்கில் பிரதானமாக இடம்பெறும் அசுர பாத்திரம்
(1) கஜமுகாசுரன் (2) கம்சன் (3) சூரபத்மன்
(4) தாரகாசுரன் (5) மகிடாசுரன் (......)

10. இலங்கைத் தமிழர் மத்தியில் வைகாசி மாதத்தில் நடைபெறும் சடங்கு நிகழ்வு
(1) பாஸ்கா (2) காமன்கூத்து (3) கந்தசஷ்டி சூரன்போர்
(4) குளுர்த்தி (5) வேட்டைத் திருவிழா (......)

11. சொக்கரி ஆற்றுகை நிகழ்த்தப்படும் அரங்கவெளி
(1) தானயம்பல (2) களத்துமேடு (3) களரி
(4) கரலிய (5) பொட்டல் (......)

12. பின்வருவோரில் நூர்த்தி நாடகத்துடன் **தொடர்புபடாதோர்**
(1) டொன் பஸ்ரியன் (2) சார்ள்ஸ் டயஸ் (3) பிலிப்பு சிஞ்ஞோ
(4) ஜோன் டி சில்வா (5) பீற்றர் டி சில்வா (......)

13. வெயார் வுமன் றூல் (Where women rule) எனும் ஆங்கில நாடகத்தை இலங்கையில் தயாரித்தவர்
(1) பேராசிரியர் அஷ்லி கல்பே (2) பேராசிரியர் சீ.டபிள்யூ.அமரசிங்க
(3) கலாநிதி ரஞ்சினி ஒபயசேகர (4) பேராசிரியர் லுடோவைக்
(5) கலாநிதி மலலசேகர (......)

14. கிரேக்க அரங்கில் ஒரஸ்ரியா (Orestia ) எனும் முக்கூட்டு நாடக முறைமையைக் கையாண்டவர்
(1) ஈஸ்கைலஸ் (2) சொஃபொக்கிளிஸ் (3) யூரிப்பிடிஸ்
(4) மெனாண்டர் (5) அஸ்டோபேன்ஸ் (......)

15. கொமடியா டெல் ஆர்த்தே எனும் நாடக வடிவம் தோன்றிய நாடு
(1) கிரேக்கம் (2) ஸ்பெயின் (3) பிரான்சு
(4) இத்தாலி (5) ஜேர்மனி (......)

16. மத்தியகால திருமறை நாடகங்கள்,
(1) யேசுவின் பிறப்பு, இறப்பு, உயிர்ப்பு என்பவற்றைக் கூறுவன.
(2) அற்புதர்களின் அற்புதக் கதைகளைக் கூறுவன.
(3) கிறிஸ்தவ மக்களின் ஒழுக்கப் பண்புகளைக் கூறுவன.
(4) கிறிஸ்தவ மக்களின் வீரதீரச் செயல்களைக் கூறுவன.
(5) கிறிஸ்தவ மக்களின் தியாகங்களைக் கூறுவன. (......)

17. யுக தர்மம் எனும் நாடகத்தின் மூலப்பிரதியை ஜேர்மனிய மொழியில் எழுதிய நாடகாசிரியர்
(1) டெனஸி வில்லியம் (2) அன்ரன் செக்கோவ் (3) பேட்டல் பிரஃட்
(4) யூஜின் அயனஸ்கோ (5) ஆதர் மில்லர் (......)

18. ஜப்பானிய நாடக மரபில் 'நோ' (Noh) எனும் சொல் குறிப்பது,
(1) ஜப்பானின் நவீன நாடக மரபை ஆகும்.
(2) ஜப்பானின் பொம்மலாட்ட நாடக மரபை ஆகும்.
(3) ஜப்பானின் ஜனரஞ்சக நாடக மரபை ஆகும்.
(4) ஜப்பானின் விகட இடை நிகழ்வு நாடக மரபை ஆகும்.
(5) ஜப்பானின் புராதன நாடக மரபையாகும். (......)

19. மேநாட்டு நாடக வளர்ச்சிக்கு பேட்டல் பிரஃடின் பங்களிப்பு,
(1) முறைமை நடிப்பினை அறிமுகம் செய்தமையாகும்.
(2) பிரயோக அரங்கு முறையை அறிமுகம் செய்தமையாகும்.
(3) விவாத அரங்கு முறையை அறிமுகம் செய்தமையாகும்.
(4) காவிய அரங்கு முறையை அறிமுகம் செய்தமையாகும்.
(5) உடற்பொறிமுறை நடிப்பினை அறிமுகம் செய்தமையாகும். (......)

20. இயற்பண்புவாத நாடகமோடியின் முன்னோடியான எமிலிஷோலாவினுடைய பிறந்தகம்,
(1) ஜேர்மனி ஆகும். (2) ரஷ்யா ஆகும். (3) பிரான்சு ஆகும்.
(4) ஸ்கொட்லாந்து ஆகும். (5) அயர்லாந்து ஆகும். (......)

21. இந்தியாவில் கூடியாட்டம் ஆடப்படும் பிரதேசம்
(1) தமிழ்நாடு (2) ஆந்திரம் (3) கேரளம்
(4) கர்நாடகம் (5) மகாராஷ்டிரா (......)

[பக். 3 ஐப் பார்க்க

22. சங்ககாலத்தில் யாழ் எனப்படும் வாத்தியத்தை வாசித்த கூத்தர் குழாம்
(1) கோடியர் (2) விறலியர் (3) பொருநர்
(4) பாணர் (5) வயிரியர் (......)

23. மாதவி ஆடிய பதினொரு ஆடல்களில் முருகன் சூரபத்மனைக் கொன்ற கதையைக் கருவாகக் கொண்டது
(1) மல்லாடல் (2) மரக்கால் ஆடல் (3) துடியாடல்
(4) பேடி ஆடல் (5) பாண்டரங்கம் (......)

24. ஆய்ச்சியர் குரவைக் கூத்தில் பங்கேற்கும் பாத்திரங்களின் எண்ணிக்கை
(1) 5 (2) 6 (3) 7
(4) 8 (5) 9 (......)

25. பின்வரும் கூத்து மரபில் புலசந்தோர் எனும் பாத்திர வரவு இடம்பெறும் கூத்து நிகழ்த்துகைக்குரிய பிரதேசம்
(1) மன்னார் (2) மலையகம் (3) மட்டக்களப்பு
(4) முல்லைத்தீவு (5) யாழ்ப்பாணம் (......)

26. ஒரு குழு இன்னொரு குழுவை மந்திர தந்திரங்களால் மயக்கும் கருவை அடிப்படையாகக் கொண்ட நாடக வடிவம்
(1) பறைமேளக் கூத்து (2) வசந்தன் கூத்து (3) நாட்டைக் கூத்து
(4) காத்தவராயன் கூத்து (5) மகிடிக் கூத்து (......)

27. மலையகத்தின் பொன்னர் - சங்கர் நாடகத்திற் குறிப்பிடப்படும் பொன்னர், சங்கர் எனப்படும் பாத்திரங்கள் குறிப்பது முறையே,
(1) தர்மர், அருச்சுனனை ஆகும். (2) தர்மர், வீமனை ஆகும்.
(3) தர்மர், சகாதேவனை ஆகும். (4) தர்மர், நகுலனை ஆகும்.
(5) நகுலன், சகாதேவனை ஆகும். (......)

28. பின்வரும் பாத்திரங்களுள் காத்தவராயன் கூத்தில் **இடம்பெறாத** பாத்திரம்
(1) தொட்டியத்துச் சின்னான் (2) வல்லத்து மாங்காளி (3) டாப்பர் மாமா
(4) வளையற் செட்டி (5) எமதர்மராஜன் (......)

29. ஈழத்தில் நாடகமும் நானும் எனும் நூலை எழுதியவர்
(1) சுவாமி விபுலானந்தர் (2) பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை
(3) கலையரசு சொர்ணலிங்கம் (4) நடிகமணி வி.வி.வைரமுத்து
(5) கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை (......)

30. 'கோடை', 'பொறுத்ததுபோதும்' போன்ற நாடகங்களை நெறியாள்கைச் செய்தமையாற் புகழடைந்த நெறியாளர்
(1) நா.சுந்தரலிங்கம் (2) இ.சிவானந்தன் (3) க.சிதம்பரநாதன்
(4) அ.தாசீசியஸ் (5) சி.மௌனகுரு (......)

31. கிரேக்கத்தில் பழைய மகிழ்நெறி (Old comedy) நாடகங்களை எழுதிய நாடகாசிரியர்
(1) அரிஸ்டோட்டில் (2) அரிஸ்ரோடென் (3) மெனாண்டர்
(4) புளோட்டஸ் (5) ரெரன்ஸ் (......)

32. கிரேக்கக் கொமடி (Comedy) யின் தோற்றம் பற்றிய சரியான கூற்று **அல்லாதது,**
(1) கோமஸ் எனும் நடனத்தில் இருந்து இது தோன்றியது.
(2) கோடக்ஸ் என்ற ஆட்டத்தில் இருந்து இது தோன்றியது.
(3) இலிங்கப் பாடல்களிலிருந்து இது தோன்றியது.
(4) கேளிக்கை - நடன ஊர்வலத்திலிருந்து இது தோன்றியது.
(5) டித்திராம் (Dithyramb) பாடலிலிருந்து இது தோன்றியது. (......)

33. பின்வரும் நாடகங்களுள் மகாகவி காளிதாசனால் எழுதப்பட்ட நாடகம்,
(1) விக்கிமோர்வசிய ஆகும். (2) மிருச்சகடிக ஆகும். (3) பிரியதர்சிக்கா ஆகும்.
(4) பஞ்சராத்ர ஆகும். (5) கர்ணாபர ஆகும். (......)

34. சமஸ்கிருத நாடக ஆசிரியரான பாசர் எழுதிய நாடகங்களுள் ஐந்து அங்கங்களைக் கொண்ட நாடகம்,
(1) மத்யம வியாயோக ஆகும். (2) கர்ணாபர ஆகும். (3) ஊருபங்க ஆகும்.
(4) பாலசரித்த ஆகும். (5) பிரத்திமா நாடக ஆகும். (......)

35. பரதமுனிவர் கூறும் 'ரச' போன்று அபிநவகுப்தர் கூறுவது,
(1) கதாசிஸ் ஆகும். (2) யூஜின் ஆகும். (3) ரசவாதம் ஆகும்.
(4) மெய்ப்பாடு ஆகும். (5) உள் ஆழம் ஆகும். (......)

36. மகாகவி காளிதாசர் எழுதிய அபிக்ஞான சாகுந்தலத்தின் மூலக்கதை,
(1) இராமாயணத்தில் உள்ளது. (2) கந்தபுராணத்தில் உள்ளது. (3) பாகவதத்தில் உள்ளது.
(4) மகாபாரதத்தில் உள்ளது. (5) மகாபுராணத்தில் உள்ளது. (......)

[பக். 4 ஐப் பார்க்க

இங்கே வெட்டி அகற்றவும்

37. சூழல் அரங்கினை (Enviornmental Theatre) தொடக்கி வைத்தவர்,
    (1) பீற்றர் புறூக் ஆவார்.
    (2) அகஸ்தா போல் ஆவார்.
    (3) அன்ரோ அன்ரொயின் ஆவார்.
    (4) றிச்சர்ட் சதேர்ண் ஆவார்.
    (5) றிச்சேர்ட் ஷெக்னர் ஆவார். (......)

38. படத்தில் காட்டப்பட்டுள்ள நாடகாசிரியரின் பெயர்,



    (1) ஸ்ரனிஸ் லாவஸ்கி ஆகும்.
    (2) மேயர் ஹோல்ட் ஆகும்.
    (3) யூஜின் ஓ நீல் ஆகும்.
    (4) அன்ரன் செக்கோவ் ஆகும்.
    (5) ரெனஸி வில்லியம் ஆகும். (......)


39.



படத்தில் காட்டப்பட்டுள்ள வேட முகங்கள்,
    (1) கிரேக்க திறெஜடி நாடகங்களுக்குரியன.
    (2) கிரேக்க கொமடி நாடகங்களுக்குரியன.
    (3) கிரேக்க சற்றயர் நாடகங்களுக்குரியன.
    (4) மத்திய கால ஐரோப்பிய ஒழுக்கப்பண்பு நாடகங்களுக்குரியன.
    (5) மலேசிய மயோங் நாடகங்களுக்குரியன. (......)

The National e-learning Portal for The General Education

40. படத்தில் காட்டப்பட்டுள்ள அரங்கு



    (1) ஜப்பானிய 'நோ' அரங்கு
    (2) ஜப்பானிய 'கபுகி' அரங்கு
    (3) சீன ஒபேறா அரங்கு
    (4) சீன தேனீர் அரங்கு (Tea house)
    (5) இந்தோனேசிய வயங்குலிட் அரங்கு (......)

* *

[பக். 5 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

නාට්‍ය හා රංග කලාව I
நாடகமும் அரங்கியலும் I
**Drama and Theatre I**

**58 T I**

3941

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி II இல் பிரிவு **A** இலிருந்து **இரண்டு** வினாக்களுக்கும் பிரிவு **B** இலிருந்து **இரண்டு** வினாக்களுக்குமாக **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி II

### பிரிவு A

(எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடை எழுதுக.)

**1.** (i) நாடகம் என்றால் என்ன ? *(02 புள்ளிகள்)*
(ii) நாடகத்திற்கும் இலக்கியத்திற்குமிடையேயான உறவுகளையும் வேறுபாடுகளையும் விளக்குக. *(06 புள்ளிகள்)*
(iii) நாடகம் சினிமாவிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது ? *(07 புள்ளிகள்)*

**2.** (i) கவிதையியல் (Poetics) எனும் நூலில் அரிஸ்டோட்டில் முன்வைத்த அவலச்சுவை நாடகத்திற்குரிய **ஆறு** பண்புகளும் யாவை ? *(03 புள்ளிகள்)*
(ii) அவை பற்றி விபரிக்குக. *(06 புள்ளிகள்)*
(iii) அரிஸ்டோட்டில் கூறிய மூன்றன் ஒருங்கியல்புகள் யாவை ? அவை நாடகமொன்றில் எவ்வாறு அமைகின்றன என அவர் கூறுவதை விளக்குக. *(06 புள்ளிகள்)*

**3.** "அரங்கவெளி என்பது வெறுமனே பார்க்குமிடம் மாத்திரமன்று. அது பார்ப்போரின் நாடகம் பற்றிய விளக்கத்திற்கும் ஆற்றுகையின் முழுமைக்கும் உதவுகின்றது." இக்கூற்றின் அர்த்தப்பாட்டை பின்வரும் அரங்குகள் எவ்வாறு கொண்டுள்ளன என்பதை விளக்குக.
(i) கூத்து நிகழ்த்தும் வட்டக்களரி அரங்கு *(05 புள்ளிகள்)*
(ii) கிரேக்க திறந்தவெளி அரங்கு *(05 புள்ளிகள்)*
(iii) ஜப்பானிய கபுகி அரங்கு *(05 புள்ளிகள்)*

### பிரிவு B

(எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடை எழுதுக.)

**4.** (i) இந்திய அரங்கில் பேசப்படும் லோகதர்மி, நாட்டியதர்மி எனும் பிரிவுகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*
(ii) நிருத்த, நிருத்திய, நாட்டிய என்பவற்றிற்கான விளக்கங்களையும் அவற்றிற்கிடையிலான வேறுபாடுகளையும் விபரிக்குக. *(09 புள்ளிகள்)*

**5.** பின்வரும் நாடகமோடிகளை விளக்குக.
(i) இயற்பண்பு நாடகமோடி *(05 புள்ளிகள்)*
(ii) கற்பித / மனோரதிய நாடகமோடி *(05புள்ளிகள்)*
(iii) கூத்துமோடி *(05 புள்ளிகள்)*

**6.** கீழே தரப்பட்டுள்ளவற்றுள் **மூன்றுக்குக்** குறிப்புகள் எழுதுக.
(i) பஞ்சபாண்டவ வனவாசம்
(ii) உடக்கு பாஸ்
(iii) கதகளி
(iv) தஹட்ட சன்னிய
(v) காமன் கூத்து *(3 x 05 = 15 புள்ளிகள்)*

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

නාට්‍ය හා රංග කලාව II
நாடகமும் அரங்கியலும் II
Drama and Theatre II

58 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

சுட்டெண் : ..........................

| பகுதி I மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

**அறிவுறுத்தல்கள் :**

❊ பகுதி I இலுள்ள **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர் பகுதி II இன் விடைத்தாள்களுடன் இணைத்து ஒப்படைக்குக.

❊ பகுதி II இல் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

❊ ***எல்லா*** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.

❊ இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குச் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, **அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

1. ‘அன்ரிகனி’ நாடகத்தில் வரும் ஈடிப்பஸின் இரண்டு ஆண்பிள்ளைகள்
   (1) அன்ரிகனி, இசுமெனி (2) யூரிடிஸ், பொலினிசெஸ்
   (3) ஈற்றோக்லிஸ், பொலினிசெஸ் (4) கிறயோன், ஏமன்
   (5) தைரீசியஸ், ஈற்றோக்லிஸ் (......)

2. ‘யூலியஸ் சீசர்’ நாடகத்தில் வரும் கதையின்படி சீசர் எனும் பாத்திரத்துக்குரியவன்,
   (1) கிரேக்கத்தின் தீபிஸ் நகரைச் சேர்ந்தவன் ஆவான்.
   (2) இத்தாலிய ரோம் நகரைச் சேர்ந்தவன் ஆவான்.
   (3) இங்கிலாந்தின் தெற்கு வேல்ஸ் நகரைச் சேர்ந்தவன் ஆவான்.
   (4) ரஷ்யாவின் மொஸ்கோ நகரைச் சேர்ந்தவன் ஆவான்.
   (5) எகிப்தின் கெய்ரோ நகரைச் சேர்ந்தவன் ஆவான். (......)

3. யூலியஸ் சீசர் நாடகத்தின் இறுதியில் புரூட்டஸ் தன்னுயிரை,
   (1) ஸ்ட்செற்ரோ பிடித்திருந்த வாளின்மீது பாய்ந்து மாய்த்துக் கொள்கிறான்.
   (2) கிளிற்றஸ் பிடித்திருந்த வாளின்மீது பாய்ந்து மாய்த்துக் கொள்கிறான்.
   (3) வொல்யூமினியஸ் பிடித்திருந்த வாளின்மீது பாய்ந்து மாய்த்துக் கொள்கிறான்.
   (4) பின்டரஸ் பிடித்திருந்த வாளின்மீது பாய்ந்து மாய்த்துக் கொள்கிறான்.
   (5) டடேனியஸ் பிடித்திருந்த வாளின்மீது பாய்ந்து மாய்த்துக் கொள்கிறான். (......)

4. ‘ஒத்தெல்லோ’ நாடகத்தில் வரும் இயாகோவின் மனைவி,
   (1) டெஸ்ரிமோனா ஆவாள். (2) கலிபோர்னியா ஆவாள். (3) கிருஷ்டீனா ஆவாள்.
   (4) எமிலியா ஆவாள். (5) கோடிலியா ஆவாள். (......)

5. ஷேக்ஸ்பியர் தனது நாடகங்களில் முதன்மையாகக் கொண்ட மூலகம்,
   (1) இசை ஆகும். (2) சொற்கள் ஆகும். (3) வேடப்புனைவு ஆகும்.
   (4) உடை ஆகும். (5) மேடை ஒளி ஆகும். (......)

6. ஜப்பானிய பாவை அரங்கின் (Pupet Theatre) பெயர்
   (1) புன்ரகு (2) கபுகி (3) கோவாக்கா
   (4) கியோஜன் (5) நோ (......)

7. பராக்கிரம நிரியல்லயினால் இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட அரங்க நிறுவனம்
   (1) ரிகோன் கலை மையம் (2) அபிநா (3) ஜன கரலிய
   (4) விபுல ரங்க சபா (5) சிங்கள நாடக சபா (......)

8. இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் நாடக அரங்கம் என்ற நூலின் ஆசிரியர்
   (1) காரை சுந்தரம்பிள்ளை (2) சொக்கன் (3) கா.சிவத்தம்பி
   (4) இ.சிவானந்தன் (5) இ.முருகையன் (......)

[பக். 2 ஐப் பார்க்க

9. சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் எழினி என்பது,
   (1) ஒளிவிதானிப்பைக் குறிக்கும்.
   (2) இசை அமைத்தலைக் குறிக்கும்.
   (3) காட்சிக்கான முன் திரையைக் குறிக்கும்.
   (4) வேட உடையைக் குறிக்கும்.
   (5) ஒப்பனை முறையைக் குறிக்கும். (……)

10. றோய் நகரப் பெண்கள் (Trojan's women) எனும் யூரிப்பிடிஸின் நாடகத்தை இலங்கையில் தயாரித்தவர்
   (1) தயானந்த குணவர்தன (2) சோமலதா சுபசிங்க (3) அனோஜா வீரசிங்க
   (4) தர்மஸ்ரீ பண்டாரநாயக்க (5) தம்மஜாகொட (……)

11. கலைமுகம், ஆற்றுகை எனும் சஞ்சிகைகளை வெளியிடும் நிறுவனம்
   (1) செயல் திறன் அரங்க இயக்கம் (2) அரங்கச் செயற்பாட்டுக் குழு
   (3) நாடக அரங்கக் கல்லூரி (4) திருமறைக் கலாமன்றம்
   (5) அரங்க ஆய்வுகூடம் (……)

12. பின்வரும் எழுத்தாளர் தொகுதியில் பா நாடகங்களை எழுதியோர் தொகுதி
   (1) கணபதிப்பிள்ளை, சுந்தரலிங்கம், சிவானந்தன்
   (2) கலைச்செல்வன், அந்தனிஜீவா, பௌசுல் அமீர்
   (3) ஜெயசங்கர், பாலசுகுமார், ரதிதரன்
   (4) முருகையன், அம்பி, மஹாகவி உருத்திரமூர்த்தி
   (5) அகளங்கன், ரகுவரன், சிறிகணேசன் (……)

13. C.N.அண்ணாத்துரை எழுதிய நாடகம்
   (1) தூக்குமேடை (2) துரோகிகள் (3) வேலைக்காரி
   (4) நச்சுக்கோப்பை (5) ரத்தக்கண்ணீர் (……)

14. திருக்குற்றாலக் குறவஞ்சி நாடகத்தில் வரும் பாட்டுடைத் தலைவர்
   (1) திருக்குற்றாலநாதர் (2) சிங்கன் (3) நூவன்
   (4) பாண்டிய மன்னன் (5) குற்றாலச் சிற்றூர்த் தலைவன் (……)

15. அலங்காரரூபன் நாடகம்,
   (1) தென்பாங்கு நாடகமாகும். (2) வடமோடி நாடகமாகும்.
   (3) தென்மோடி நாடகமாகும். (4) வடபாங்கு நாடகமாகும்.
   (5) இசை நாடகமாகும். (……)

16. அலங்காரரூபன் நாடகத்தில் அலங்காரரூபியை அடைய அலங்காரரூபன் தாங்கும் வேடங்கள்
   (1) தலையாரி, கள்ளன், செட்டி (2) இளவரசன், கிழவன், விறகுதலையன்
   (3) வேடன், விருத்தன், தலையாரி (4) இளவரசன், செட்டி, விறகுதலையன்
   (5) இளவரசன், செட்டி, மந்திரவாதி (……)

17. குற்றாலக் குறவஞ்சியில் சிங்கனும் நூவனும் சந்தித்து உரையாடும் காட்சியில் எழும் பிரதான சுவை,
   (1) பீபத்ஸமாகும். (2) சிருங்காரமாகும். (3) அற்புதமாகும்.
   (4) ரௌத்ரமாகும். (5) ஹாஸ்யமாகும். (……)

18. ஒரு பாவையின் வீடு நாடகத்தில் **இடம்பெறாத** பாத்திரம்
   (1) ஹெல்மர் (2) குறொக்ஸ்டட் (3) கிறிஸ்ரினா
   (4) லோறா (5) டொக்டர் ராங் (……)

19. தாளக்காவடி, மயில் போன்ற நாடகங்களை எழுதியவர்
   (1) எஸ்.ரி.அரசு (2) ஏ.ரி.பொன்னுத்துரை (3) கோகிலா மகேந்திரன்
   (4) கதிரேசபிள்ளை (5) அ.பொ.செல்லையா (……)

20. பேராசிரியர் வித்தியானந்தன் **தயாரிக்காத** ஒரு கூத்து
   (1) கர்ணன் போர் (2) நொண்டி நாடகம் (3) வாலிவதை
   (4) இராவணேசன் (5) அல்லி அர்ஜுனா (……)

21. 'டம்பாச்சாரி விலாசம்' எனும் நாடகத்தை எழுதியவர்
   (1) சகஸ்ரநாமம் (2) காசிவிசுவநாதமுதலியார் (3) கந்தசாமி முதலியார்
   (4) நவாப்ராஜாமாணிக்கம்பிள்ளை (5) தெ.பொ.கிருஷ்ணசாமி பாவலர் (……)

[பக். 3 ஐப் பார்க்க

22. கூத்துப்பட்டறை நா.முத்துசாமி எழுதிய நாடகம்
    (1) பலி ஆடுகள் (2) துர்க்கிர அவலம் (3) வெறியாட்டு
    (4) நாற்காலிகாரர் (5) அரவான் (……)

23. அ.ந.கந்தசாமியால் எழுதப்பட்ட நாடகம்
    (1) அதலபாதாளம் (2) அவள் ஏன் கலங்குகிறாள் ?
    (3) மதமாற்றம் (4) அக்கினிப்பூக்கள்
    (5) மானிடம் என்பது புல்லோ ? (……)

24. பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம் எனும் ஆய்வு நூலின் ஆசிரியர்
    (1) பேராசிரியர் கணபதிப்பிள்ளை (2) பேராசிரியர் இராமானுஜம்
    (3) பேராசிரியர் இராமசாமி (4) பேராசிரியர் குணசேகரன்
    (5) பேராசிரியர் சிவத்தம்பி (……)

25. நடிகர் நீண்ட வசனம் பேச காற்றைச் சேமித்து வைக்கும் பகுதி
    (1) தொண்டை (2) அடிவயிறு (3) நெஞ்சு
    (4) நாசி (5) உச்சந்தலை (……)

26. நடிகர் பிரதானமாகக் கொண்டிருக்க வேண்டியது,
    (1) பாடும் திறனாகும். (2) ஆடும் திறனாகும்.
    (3) உள்ளார்ந்த நடிப்பாற்றலாகும். (4) அழகான உடலாகும்.
    (5) சபைக்கூச்சமற்ற மனோபாங்காகும். (……)

27. அவதானத்துக்கும் கருத்தூன்றலுக்குமாக அமையக்கூடிய அரங்க விளையாட்டு
    (1) பழக்கலவை (2) ஆடும் வீடும்
    (3) தலைவரைக் கண்டுபிடித்தல் (4) நண்டு, இறால், மீன்
    (5) கரடியும் கிராம மக்களும் (……)

28. நாடகத்திற்கான விளம்பரம் பிரதானமாக,
    (1) நடிகரால் செய்யப்பட வேண்டும்.
    (2) தயாரிப்பாளரால் செய்யப்பட வேண்டும்.
    (3) நாடக ஆசிரியரால் செய்யப்பட வேண்டும்.
    (4) நாடக நெறியாளரால் செய்யப்பட வேண்டும்.
    (5) மேடை முகாமையாளரால் செய்யப்பட வேண்டும். (……)

29. தொலைக்காட்சி நாடகத்தின் வெற்றி,
    (1) அது அளிக்கும் காட்சியில் தங்கியுள்ளது.
    (2) அதன் வழிவரும் குரலில் தங்கியுள்ளது.
    (3) காட்சியையும் குரலையும் இணைப்பதில் தங்கியுள்ளது.
    (4) வெளிப்புறக் காட்சிகளில் தங்கியுள்ளது.
    (5) ஒலிப்பதிவில் தங்கியுள்ளது. (……)

30. வானொலி நாடகத்திற்கான மேடை,
    (1) ஒலிப்பதிவு செய்யும் கலையகமாகும்.
    (2) நடிகர்கள் நின்று நடிக்கும் இடமாகும்.
    (3) காற்றுவெளி ஆகும்.
    (4) கேட்போரின் மனமாகும்.
    (5) நடிப்போரின் மனமாகும். (……)

31. பேட்டல் பிரெஃட் தனது வெண்கட்டி வட்டம் (Chalk Circle) நாடகத்திற்கான கருவையும் உருவையும் பெற்றுக்கொண்டது,
    (1) சமஸ்கிருத நாடக மரபிலிருந்தாகும்.
    (2) சீன நாடக மரபிலிருந்தாகும்.
    (3) ஜப்பானிய நாடக மரபிலிருந்தாகும்.
    (4) கொரிய நாடக மரபிலிருந்தாகும்.
    (5) மலேசிய நாடக மரபிலிருந்தாகும். (……)

32. பின்வருவோரில் நாடகாசிரியர் **அல்லாதவர்,**
    (1) வில்லியம் ஷேக்ஸ்பியர் ஆவார். (2) ஹென்றிக் இப்சன் ஆவார்.
    (3) அன்ரன் செக்கோவ் ஆவார். (4) ஸ்ரனிஸ்லவஸ்கி ஆவார்.
    (5) சூத்ரகர் ஆவார். (……)

இங்கே வெட்டி அகற்றவும்

33. மேடை நாடகத்தின் ஒளியமைப்பு,
   (1) காட்சிகளை அழகாக்கப் பயன்படும்.
   (2) மேடையைப் பிரகாசமாக்கப் பயன்படும்.
   (3) நாடகத்தின் இசையைத் தூக்கலாகக் காட்டப் பயன்படும்.
   (4) கதை ஓட்டத்தையும் பாத்திர உணர்வையும் புலப்படுத்தப் பயன்படும்.
   (5) நடிப்பவர்களின் முகங்களைத் தெளிவாகக் காட்டப் பயன்படும். (……)

34. ஒரு காட்சியில் ஒரு நடிகர் உரையாடுகின்றபோது மற்றைய நடிகர்,
   (1) குறுக்கே பேசாது இருத்தல் வேண்டும்.
   (2) நினைவூட்டுனரைக் கவனிக்க வேண்டும்.
   (3) பார்வையாளரை அவதானிக்க வேண்டும்.
   (4) நெறியாளரை அவதானிக்க வேண்டும்.
   (5) தனது உடலால் வேண்டிய பதிற் குறிகளைக் காட்ட வேண்டும். (……)

35. நியம அரங்கில் நடிகர் தெரிவு **இடம்பெறாத** ஒரு முறை
   (1) திறந்த தெரிவு
   (2) நேர்முகத் தெரிவு
   (3) சல்லடைத் தெரிவு
   (4) மறைமுகத் தெரிவு
   (5) விசேட தெரிவு (……)

36. மேடை நாடகத்தில் காட்சிகளைத் தெளிவாகப் புலப்படுத்தக் கையாளப்படும் ஒளி முறைகளுள் ஒன்று,
   (1) பொட்டொளி ஆகும்.
   (2) கீற்றொளி ஆகும்.
   (3) பின்பாத ஒளி ஆகும்.
   (4) பெருக்கொளி ஆகும்.
   (5) வர்ணச் சக்கரம் ஆகும். (……)

37. யூலியஸ் சீஸர் நாடகத்தில் வரும் பின்வரும் உரையாடலைக் கவனித்து கீழ்வரும் வினாவுக்கு விடை எழுதுக.

   A - என்ன கூச்சல் ? இந்நகர் மக்கள் சீஸரை மன்னனாய் தெரிவுசெய்தனரோ ?
   B - அஞ்சுகிறாயா ? அவனே மன்னனாய் வருவதில் உனக்கு விருப்பம் இல்லையா ?
   A - சீஸரின் அன்பன் நான். ஆயினும் அவனே மன்னன் ஆவதை விரும்பவில்லை.

   இவ்வுரையாடலில் A, B எனக் குறிப்பிடப்படும் பாத்திரங்கள்
   (1) புறூட்டஸ், கயஸ்கா
   (2) புறூட்டஸ், கசியஸ்
   (3) மார்க் அன்ரனி, லெப்பிடஸ்
   (4) கயஸ்கா, காசியஸ்
   (5) புறூட்டஸ், சின்னா (……)

38. சீஸர் நாடகத்தில் சீஸருக்குரிய கரிநாள் கூறப்பட்டது,
   (1) மார்ச் 18 இல் ஆகும்.
   (2) மார்ச் 17 இல் ஆகும்.
   (3) மார்ச் 16 இல் ஆகும்.
   (4) மார்ச் 15 இல் ஆகும்.
   (5) மார்ச் 12 இல் ஆகும். (……)

39. அருகிலுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ள மேற்கத்திய அரங்கவியலாளர்,
   (1) மேயர் ஹோல்ட் ஆவார்.
   (2) மார்லோ ஆவார்.
   (3) சாமுவேல் பெக்கற் ஆவார்.
   (4) ஆதர் மில்லர் ஆவார்.
   (5) பேட்டல் பிரஃட் ஆவார். (……)



40. அருகிலுள்ள படத்தில் ஆடப்படும் நடனம்
   (1) கூடியாட்டம்
   (2) மணிப்புரி
   (3) ஒடிஸி
   (4) கதக்
   (5) கதகளி (……)



* *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

නාට්‍ය හා රංග කලාව II
நாடகமும் அரங்கியலும் II
Drama and Theatre II

58 T II

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி II இல் பிரிவு **A** இலிருந்து **இரண்டு** வினாக்களுக்கும் பிரிவு **B** இலிருந்து **இரண்டு** வினாக்களுக்குமாக **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி II

### பிரிவு A

(எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடை எழுதுக.)

**1.** "கிரேக்க அரங்க மரபில் அன்ரிகனி உலகப் பிரசித்தி பெற்ற ஒரு திறஜடி நாடகமாக விளங்கியது."

(i) இந் நாடகத்தில் வரும் பிரதான மோதுகை யாது ? *(05 புள்ளிகள்)*

(ii) அன்ரிகனி, ஏமன், கிறயன் ஆகிய பாத்திரங்களின் இயல்புகளையும் அவை மோதிக்கொள்ளும் சந்தர்ப்பங்களையும் அன்ரிகனி நாடக பாட உதவியுடன் விளக்குக. *(10 புள்ளிகள்)*

**2.** ஒத்தெல்லோ நாடகம் ஒத்தெல்லோ, ரெஸ்ரிமோனா, இயாகோ ஆகிய பாத்திரங்களின் மோதுதல் காரணமாக வளர்ந்து செல்கின்றது.

(i) ஒத்தெல்லோவின் பாத்திர குணாதிசயங்களை விளக்குக. *(05 புள்ளிகள்)*

(ii) ரெஸ்ரிமோனாவின் குணவியல்புகளை விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iii) இயாகோவின் குணவியல்புகளை விளக்குக. *(05 புள்ளிகள்)*

**3.** நா.சுந்தரலிங்கத்தின் அபசுரம் ஓர் அபத்த நாடகமன்று. அது அபத்தச் சாயல் பெற்ற நாடகமாகும். அந்நாடகத்தில் வரும் கீழ்வரும் பாத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றினை விளக்குக.

(i) பொதுவர் *(05 புள்ளிகள்)*

(ii) புரொபசர் *(05 புள்ளிகள்)*

(iii) சிவாயர் *(05 புள்ளிகள்)*

### பிரிவு B

(எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடை எழுதுக.)

**4.** "சிங்கள-தமிழ் மரபுவழி நாடகங்களிடையே குறிப்பிடத்தக்க ஒற்றுமைகள் காணப்படுகின்றன."
கீழ்வரும் தலைப்புகளின் கீழ் அவற்றை விளக்குக.

(i) தமிழ்க்கூத்து - சிங்கள நாடகம *(05 புள்ளிகள்)*

(ii) தமிழ்க் கழிப்புச் சடங்கு - சிங்கள தொவில் *(05 புள்ளிகள்)*

(iii) தமிழ் இசை நாடகம் - சிங்கள நூர்த்தி நாடகம் *(05 புள்ளிகள்)*

**5.** இலங்கைத் தமிழ் அரங்க வளர்ச்சியில் பின்வருவோரின் பங்களிப்புகளைத் தருக.

(i) பேராசிரியர் கா.சிவத்தம்பி *(05 புள்ளிகள்)*

(ii) நடிகமணி வி.வி.வைரமுத்து *(05 புள்ளிகள்)*

(iii) நா.சுந்தரலிங்கம் *(05 புள்ளிகள்)*

**6.** கூத்து நிகழ்த்தப்படுகையில் அது அழகியலாக வெளிப்படும் அதேவேளை சமூகத்தை ஒன்றிணைக்கும் வல்லமையையும் கொண்டுள்ளது.

(i) கூத்தின் அழகியல் அம்சங்களை விளக்குக. *(07 புள்ளிகள்)*

(ii) அது சமூகத்தை ஒன்றிணைக்கும் வல்லமையை விளக்குக. *(08 புள்ளிகள்)*

※※※